# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

# TNPSC -ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV

# (தொகுதி-IV பணிகள்)

தேர்வு: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC)

பாடம் : தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

பகுதி : அழகு I: சுட்டு எழுத்துகள்

## உள்ளடக்கம்


சுட்டு எழுத்துகள் .......... 2

மாதிரி வினாக்கள் (புத்தகப் பயிற்சி வினாக்கள்) .......... 5



**© Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act. It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

## சுட்டு எழுத்துகள்

ஒரு பொருளைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்குப் பயன்படும் எழுத்துகள் சில உள்ளன, பின்வருவனவற்றைப் படியுங்கள்;

அவ்வீடு

இப்புத்தகம்

அம்மரம்

இப்பூனை

மேலே உள்ள, வீடு, புத்தகம், மரம், பூனை முதலிய சொற்களுக்கு முன் அ, இ ஆகிய எழுத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த எழுத்துகள் பொருள்களைச் சுட்டிக் காட்டப் பயன்படுகின்றன. ஒரு பொருளின் பெயருக்கு முன் இந்த எழுத்துகள் வந்து, அந்தப் பொருளைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டப் பயன்படுகின்றன.

ஒரு தென்னந்தோப்பில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் நிற்கும். மரங்கள் என்று சொன்னால் அது அந்தத் தோப்பில் உள்ள மரங்களைக் குறிக்கும். மரம் என்றால் அது தோப்பில் உள்ள ஏதோ ஒரு மரத்தைக் குறிக்கும். அம்மரம் என்று சொன்னால் அத்தோப்பில் உள்ள ஒரு குறிப்பிட்ட மரம் சுட்டிக்காட்டப்படுவதை நாம் உணரமுடியும். இவ்வாறு சுட்டிக்காட்ட உதவும் எழுத்து, சுட்டு எழுத்து எனப்படும். அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். உ என்ற சுட்டு எழுத்து, தற்காலத்தில் பயன்பாட்டில் இல்லை.

உதுக்காண், உவன், உங்கே என்ற இடங்களில் உகரம் சுட்டு எழுத்தாக வந்துள்ளதைக் காணலாம். இக்காலத்தில் இலங்கையில் வாழும் தமிழர்கள் மட்டும் உகரச் சுட்டைப் பயன்படுத்துகின்றனர், மற்றபடி இக்காலத் தமிழ் மொழியில் உகரச் சுட்டு இடம்பெறுவதில்லை.

அ, இ, உம் முதல் தனிவரின் சுட்டே (66) - என்னும் நன்னூல் நூற்பா சுட்டு எழுத்துகள் எவை என்று குறிக்கிறது.

அவன், அவள் என்னும் சுட்டுச்சொற்கள் ஆணா, பெண்ணா என்பதையும் சுட்டிச் சொல்லிவிடுகின்றன.

அ, இ சுட்டெழுத்துக்கள் தனியே நின்று சுட்டும் போது, ஆண் பெண் அனைவரையும் பொதுவாக சுட்டுகின்றன.

அது, இது, அந்த, இந்த, அங்கு, இங்கு என்னும் சுட்டுச்சொற்களே இன்று பெருவழக்காகிவிட்டன.

'உ' - சுட்டு எழுத்து

அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட உ என்ற சுட்டெழுத்து அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இன்று 'உ' என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

எ.கா. உது, உவன்

உதுக்காண் என்றால் சற்றுத் தொலைவில் பார் என்பது பொருள்.

உப்பக்கம் என்றால் முதுகுப்பக்கம் என்பது பொருள்.

உம்பர் என்றால் மேலே என்பது பொருள்.

அகச்சுட்டு

அவன், இவள், அது, இது; இந்தச் சொற்களில் அ, இ ஆகிய எழுத்துகள் சுட்டுப்பொருளை உணர்த்தி வருகின்றன. இவை சொல்லுக்கு உள்ளேயே இருக்கின்றன. அவன் என்பதில் ’அ’ என்ற சுட்டு எழுத்தை நீக்கிவிட்டால் ‘வன்’ என்ற எழுத்து தனியே நின்று பொருள் இல்லாமல் போய்விடும். எனவே இவற்றைச் சொல்லில் இருந்து தனியே பிரித்துக் காணமுடியாது. ஒரு சொல்லுக்கு உள்ளே இருந்து, சுட்டுப் பொருளையும் உணர்த்துவதால், இவற்றை அகச் சுட்டு என்று கூறுவர். அகம் என்பது உள்ளே என்று பொருள்படும்.

புறச்சுட்டு

- அவ்வீடு
- இம்மனிதன்
- அக்குளம்
- இம்மாடு

மேலே காட்டியவற்றில் அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் வீடு, மனிதன் முதலியவற்றுடன் கூடி. ஒரே சொல் போன்று காட்சி தருகின்றன. எனினும் இவற்றைத் தனியே பிரிக்க முடியும். எடுத்துக்காட்டாக மேலே உள்ள சொற்களில் சுட்டு எழுத்துகளை நீக்கிப் பார்க்கலாம்.

- அ + வீடு
- இ + மனிதன்
- அ + குளம்
- இ + மாடு

இவற்றில் சுட்டு எழுத்தை நீக்கிய பின் வீடு, மனிதன், குளம், மாடு ஆகிய சொற்கள் தனித்து நிற்கின்றன. இந்த எடுத்துக்காட்டுகளில் சொல்லுக்கு வெளியே இருந்து சுட்டு எழுத்துகள் சுட்டுப் பொருளை உணர்த்துவதால் இவை புறச் சுட்டு எனப்படுகின்றன, புறம் என்பது வெளியே என்று பொருள்படும்.

அண்மைச் சுட்டு

- இப்பூனை
- இப்புத்தகம்
- இம்மாடு
- இக்கட்டில்

இப்புத்தகம், இப்பூனை முதலியன அருகில் உள்ள பொருள்களைச் சுட்டிக் காட்டுகின்றன. எனவே இவற்றை அண்மைச் சுட்டு என்கிறோம். அண்மை என்பது அருகில் என்று பொருள்படும்.

சேய்மைச் சுட்டு

- அவ்வீடு
- அக்கரை
- அம்மரம்
- அக்குளம்

மேலே காட்டப்பட்ட எடுத்துக் காட்டுகளில், அவ்வீடு, அம்மரம் முதலியன தொலைவில் உள்ள பொருள்களைச் சுட்டிக்காட்டுகின்றன, எனவே இதனைச் சேய்மைச் சுட்டு என்கிறோம். சேய்மை என்பது தொலைவு என்று பொருள்படும்.

சுட்டுத் திரிபு

- அந்த மரம்
- இந்த வீடு
- அந்த மாடு
- இந்த ஆடு

மேலே காட்டிய எடுத்துக் காட்டுகளில் மரம், வீடு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டும் அந்த, இந்த ஆகியவை சொல்லுக்கு வெளியே தனியே நின்றுள்ளன. இவை அடிப்படையில் அ, இ என்ற சுட்டு எழுத்துகளே. ஆனால் இங்கு அந்த, இந்த என்று மாறியுள்ளன. இவை தம் வடிவத்திலிருந்து திரிந்து, பொருளைச் சுட்டுகின்றன. எனவே இவற்றைச் சுட்டுத் திரிபு என்று கூறுவர்.

## மாதிரி வினாக்கள் (புத்தகப் பயிற்சி வினாக்கள்)

1. சரியான விடையைத் தேர்வு செய்க:

1. என் வீடு அங்கே உள்ளது. (அது/அங்கே )
2. தம்பி இங்கே வா. (இவர்/இங்கே)
3. நீர் எங்கே தேங்கி இருக்கிறது? (அது / எங்கே)
4. யார் அவர் தெரியுமா? (அவர் / யாது)
5. உன் வீடு எங்கே அமைந்துள்ளது? (எங்கே / என்னை)

2. இப்பத்தியில் உள்ள சுட்டுச் சொற்களை எடுத்து எழுதுக.

கரிகாலனும் அவனுடைய தங்கை மலர்க்கொடியும் பூங்காவிற்குச் சென்றனர். அங்கு இருந்த செடிகளில் பூக்கள் மலர்ந்து இருந்தன. "இங்கு உள்ள மலர்களில் இம்மலர் அழகாக உள்ளது. அம்மலர் பெரியதாக உள்ளது" என்றாள் மலர்க்கொடி, "இந்த மலரைப் பார் அந்த மலரைவிட அழகாக உள்ளது" என்றான் கரிகாலன்.

இப்பத்தியில் உள்ள சுட்டுச் சொற்கள் :

1. அவனுடைய
2. அங்கு
3. இங்கு
4. இம்மலர்
5. அம்மலர்
6. இந்த மலர்
7. அந்த மலர்

3. வினாக்களுக்குச் சுட்டுச்சொற்கள் இட்டு, விடை எழுதுக

1. எது உன் வீடு?

   இது என் வீடு
2. யார் உன் அண்ணன்?

   அது என் அண்ணன்
3. உன் பள்ளிக்கூடம் எங்குள்ளது?

   என் பள்ளிக்கூடம் அந்தப்பக்கம் உள்ளது

4. “அவன்” – இச்சொல்லில் அமைந்துள்ள சுட்டு வகை எது?

அ) புறச்சுட்டு ஆ) அகச்சுட்டு

இ) சுட்டுத் திரிபு ஈ) அண்மைச் சுட்டு

விடை: ஆ) அகச்சுட்டு

5. சொல்லின் வெளியே நின்று சுட்டுப் பொருளை உணர்த்துவது எது?

அ) அகச்சுட்டு ஆ) புறச்சுட்டு

இ) சுட்டுத் திரிபு ஈ) இடைச்சுட்டு

விடை: ஆ) புறச்சுட்டு

6. “அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் உள்ளதைக் காட்டப் பயன்பட்ட சுட்டு எழுத்து எது?”

அ) அ ஆ) இ

இ) உ ஈ) எ

விடை: இ) உ

7. கீழ்க்காணும் சொற்களில் ‘சுட்டுத் திரிபு’ சொல்லினைத் தேர்ந்தெடுக்க:

அ) இவன் ஆ) அம்மலை

இ) இப்பெட்டி ஈ) அந்த மரம்

விடை: ஈ) அந்த மரம்

8. பொருத்தமற்ற இணையைக் கண்டறிக:

அ) அண்மைச் சுட்டு – இ ஆ) சேய்மைச் சுட்டு – அ

இ) சுட்டுத் திரிபு – அந்த, இந்த ஈ) அகச்சுட்டு – அவ்வீடு

விடை: ஈ) அகச்சுட்டு – அவ்வீடு